


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”




Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 253 | 07.03.2026 | SATURDAY | MAASI : 23 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 253 | 07.03.2026 | சனிக்கிழமை | மாசி : 23 | விலை : ரூ.5/–

## 2 ஆண்டுகளில் செய்த

# “மக்கள் பணி என்ன?!”

## மத்திய அமைச்சர்களிடம் விவரம் கேட்கும் பிரதமர் மோடி

புதுடெல்லி: மார்ச்.7-

கடந்த இரண்டு வருடங்களில் மக்களுக்காக அமைச்சகங்கள் செய்த பணிகளின் விவரத்தைக் கேட்டுள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. இவற்றை புள்ளிவிவரங்களுடன் சமர்ப்பிக்கும்படி மத்திய அமைச்சர்களுக்கு அவர் அறிவுறுத்தி உள்ளார்.

கடந்த 2024ல் நாடாளுமன்ற மக்களவைக்கு பொதுத்தேர்தல் நடைபெற்றது. இதில், முக்கியப் போட்டியாளரான பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றது.

இதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறை பிரதமராக நரேந்திர மோடி மீண்டும் பதவி ஏற்றார். இவருடன் பதவியில் அமர்ந்த மத்திய அமைச்சர்களை பிரதமர் மோடி தொடர்ந்து மக்கள் பணி செய்ய வலியுறுத்தி வருகிறார்.

இந்த வகையில் அவர், கடந்த இரண்டு வருடங்களில் மத்திய அமைச்சகங்கள் மக்களுக்காக செய்த பணிகள் என்ன எனக் கேட்டிருக்கிறார். இந்த தரவுகளை புள்ளிவிவரங்களுடன் சமர்ப்பிக்கும்படி அனைத்து அமைச்சர்களுக்கும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.

இது குறித்து மத்திய அமைச்சக வட்டாரங்கள் கூறுகையில், ‘அனைத்து அமைச்சர்களும் அந்தந்த அமைச்சகங்களில் முக்கிய சீர்திருத்தங்கள் குறித்த விரிவான விளக்கக் காட்சியைத் தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



புள்ளிவிவரங்களுடனான தரவுகள் மற்றும் எடுத்துக்காட்டுகள் மூலம் அமைக்கங்களிலான சீர்திருத்தங்களின் தாக்கத்தை விளக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2024ல் புதிய அரசு அமைந்த பிறகு அமைக்கங்களின் சீர்திருத்தங்கள் சாதாரண குடிமக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கத்தை பிரதமர் மோடி அறிய விரும்புகிறார். இதில், மத்திய அரசின் கொள்கை மாற்றங்கள், நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல் இடம்பெற்றுள்ளன.

அரசு சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தில் முன்னேற்றங்கள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புகளின் மீதான மாற்றங்கள் உள்ளிட்டவற்றையும் விளக்கும் படி கோரப்பட்டுள்ளது. இவை பொதுமக்களுக்கு எவ்வாறு பயனளித்துள்ளது என்பதை பிரதமர் மோடி தன் பிரச்சாரங்களில் வெளிப்படுத்த விரும்புகிறார்.

இதன் மீதான விளக்கக் காட்சிகளில் சீர்திருத்தங்களின் பின்னணி, நோக்கங்கள், செயல்படுத்தல் செயல்முறை, எதிர்கொள்ளும் சவால்கள், அவற்றின் தீர்வுகள் மற்றும் அடையப்பட்ட முடிவுகள் பற்றிய உண்மை விவரம் இருக்கும்.

கொள்கை வகுப்பது மட்டுமல்ல, அவற்றை திறம்பட செயல்படுத்துவதும், களத்தில் முடிவுகளை உறுதி செய்வதும் ஒரு பொறுப்பான அரசின் முன்னுரிமை என்றும் பிரதமர் மோடி சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றின் மூலம், அமைச்சகங்களின் பணிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவை மக்களை மையமாகக் கொண்டதாகவும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், பயனுள்ளதாகவும் மாற்ற மேலும் உத்திகள் வகுக்கப்படும்’ எனத் தெரிவித்தனர்.

இந்த அறிவுறுத்தல் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது பிரதமரால் அமைச்சர்களுக்கு நேரடியாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமரின் இந்த அறிவுறுத்தலுக்கு பின் அனைத்து அமைச்சகங்களும் அந்தந்த துறைகளுக்கான சீர்திருத்தங்களின் பட்டியலைத் தொடர்ந்து தயாரித்து வருகின்றன.

இவை, விரைவில் வரவிருக்கும் ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலின் பிரச்சாரங்களில் பாஜக சார்பில் முன்னிறுத்தப்பட உள்ளன. ஏனெனில், மத்திய அரசுக்கு தலைமை ஏற்றுள்ள பாஜக தொடர்ந்து பொதுமக்களுக்கு பலன் தரும் தனது நிர்வாகத் திறமையால் வெற்றியைத் தொடர விரும்புவதாக தகவல்.

மிகவும் சிறப்பு வாய்ந்த இந்த மதிப்பாய்வின் மூலம், மத்திய அமைச்சர்களின் நிர்வாகத் தன்மையும் மதிப்பிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கு பின் மத்திய அமைச்சரவை விரிவக்கம் அல்லது மாற்றத்திற்கும் பயன்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

## ‘ராணுவ மோதல்கள் தீர்வாகாது’ போர்களுக்கு முடிவு காண பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி: மார்ச்.7-

மேற்கு ஆசியா மற்றும் உக்ரைன் போர்களுக்கு விரைவில் முடிவு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர் நரேந்திர மோடி, ராணுவ மோதல்கள் மூலம் எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காண முடியாது என்பதை பின்லாந்து அதிபர் உடனான சந்திப்பின் போது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.



இந்தியாவுக்கு நான்கு நாள் அரசு முறைப் பயணமாக வந்துள்ள பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப்புடன், பிரதமர் மோடி நேற்று விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினர்.

அதன் பின்னர் பிரதமர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் கூறியதாவது: இந்தியாவும் பின்லாந்தும் சட்டத்தின் ஆட்சி, பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர வழிமுறைகளில் நம்பிக்கை கொண்டுள்ளன. ராணுவ மோதல்கள் மூலமாக மட்டுமே எந்தவொரு சிக்கலுக்கும் தீர்வு கண்டுவிட முடியாது என்பதில் இரு நாடுகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன.

உக்ரைன் விவகாரமாக இருந்தாலும் சரி, மேற்கு ஆசியாவாக இருந்தாலும் சரி, போர்களை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், அமைதிக்கான அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். இரு நாடுகளுக்கும் இடையிலான டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிலைத் தன்மை தொடர்பான உறவுகளில் இருவரும் இணைந்து செயல்படுவது என இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு முதல் 6 ஜி தொலைத்தொடர்பு வரை, தூய்மையான எரிசக்தி முதல் குவாண்டம் கம்ப்யூட்டிங் வரை, இந்தத் கூட்டாண்மை இரு நாடுகளிடையே புதிய வேகத்தையும் ஆற்றலையும் வழங்கும்.

மேலும், இந்தியா ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவிற்கும் பின்லாந்திற்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும். இவ்வாறு பிரதமர் மோடி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## நாங்குநேரி இரட்டை கொலை: உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க கோரி முறையீடு

மதுரை: மார்ச்.7-

நாங்குநேரி இரட்டை கொலை சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரி நீதிபதிகளிடம் வழக்கறிஞர் ஒருவர் முறையீடு செய்தார்.



நெல்லை மாவட்டம் நாங்குநேரி காவல் சரகம், பெரும்பத்து பஜாரில் இரவு பைக்கில் வந்த 9 பேர் கொண்ட மர்ம கும்பல், அங்கு டீ கடை அருகே சாலையில் நின்று கொண்டிருந்த பொதுமக்களை சரமாரியாக வெட்டியது. இந்தச் சம்பவத்தில் வடமாநில செங்கல் சூளை தொழிலாளி உள்பட இரண்டு பேர் பலியாகினர். கண்மூடித்தனமாக வெட்டியதில் 6 பேருக்கு பலத்த வெட்டுக் காயம் விழுந்தது.

இந்தக் கொடூர தாக்குதலில் பெரும்பத்து இந்திரா காலனியை சேர்ந்த ஜான் (42) மற்றும் வட மாநில செங்கல் சூளை தொழிலாளி திருநாத் கட்டா ஆகிய இரண்டு பேரும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே இறந்தனர். பெரும்பத்து பகுதியைச் சேர்ந்த ஆபிரகாம் மகன் நெல்சன் (58), பால்வண்ணன் மகன் பிரபாகரன், வைகுண்டம் மகன் ராமசாமி, வீராங்குளம் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் கணேசன் (53) ஆகியோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து 9 பேரை கைது செய்து உள்ளனர். இந்த நிலையில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வு இன்று காலையில் வழக்குகளை விசாரிக்க தொடங்கியது.

அப்போது, வழக்கறிஞர் ஆயிரம் கே.செல்வகுமார் என்பவர் நீதிபதிகள் முன்பு ஆஜராகி, ‘நாங்குநேரியில் வடமாநில தொழிலாளி உட்பட இரண்டு பேர் கொல்லப்பட்டதற்கு தமிழக அரசு சார்பில் இதுவரை எந்த நிவாரணமோ, இழப்பீடோ அறிவிக்கப்படவில்லை.

புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பத்தின் துயரங்களைக் கருத்தில் கொண்டு, எந்தக் காரணமும் இல்லாமல் கொலை செய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளியின் குடும்பத்துக்கு தேவையான நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும், இந்த விவகாரத்தை நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து விசாரிக்க வேண்டும்’ என்று முறையிட்டார்.

பின்னர் நீதிபதிகள், இந்த விவகாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு குறித்து உரிய அதிகாரிகளிடம் கேட்டு அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இன்னும் அதிக திட்டங்கள் : துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

தென்காசி: மார்ச்.7-

திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இன்னும் அதிக திட்டங்களை முதல்வர் செயல்படுத்துவார் என்றும், நீங்கள் தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தென்காசி மாவட்டம் இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பல்வேறு துறைகள் மூலம் 7,127 பயனாளிகளுக்கு ரூ.44.05 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, ரூ.6.02 கோடி மதிப்பீட்டில் 32 முடிவுற்ற திட்டப் பணிகள் தொடக்க விழா, ரூ.55.93 கோடி மதிப்பீட்டில் 185 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமை வகித்தார். தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் வரவேற்று பேசினார். விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, திட்டப் பணிகளை தொடங்கிவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது: இந்த விழாவில் மகளிர் அதிகமாக பங்கேற்றுள்ளீர்கள். உங்கள் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியே திராவிட மாடல் வெற்றிக்கு சாட்சியாக உள்ளது. இந்தியாவிலேயே மகளிர் முன்னேற்றதுக்காக தமிழக முதல்வர் பல முன் மாதிரி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஆட்சிக்கு வந்ததும் மகளிர் விடியல் பயணம் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் தென்காசி மாவட்டத்தில் 12 கோடி பயணங்களை மகளிர் மேள்கொண்டுள்ளனர்.

காலையில் தாய்மார்கள் சமையல் செய்து, பள்ளிக்கு குழந்தைகளை அனுப்ப சிரமப்படக் கூடாது என்பதற்காக பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை கொண்டுவந்தார். தென்காசி மாவட்டத்தில் 12 ஆயிரம் குழந்தைகள் காலை உணவு திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர். அரசு பள்ளியில் படித்து கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு புதுமை பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் தென்காசி மாவட்டத்தில் சுமார் 18 ஆயிரம் மாணவிகள் பயனடைகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை தமிழக முதல்வர் வழங்கினார். இத்திட்டத்தில் தென்காசி மாவட்டத்தில் 4,000 பேர் பயனடைந்துள்ளனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலம் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் 1.31 கோடி பேருக்கு வழங்கப்படுகிறது. தென்காசி மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 3.30 லட்சம் மகளிர் உரிமைத் தொகை பெறுகின்றனர். தேர்தலை காரணம் காட்டி இத்திட்டத்தை நிறுத்த சில பேர் முயற்சி செய்தனர். ஆனால் தமிழக முதல்வர் அதனை முறியடித்து, 1.31 லட்சம் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாயை முதல்வர் வழங்கினார்.

மேலும், கோடை கால சிறப்பு நிதியாக விளிம்பு நிலையில் உள்ள முதியோர், கைம் பெண்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.2,000 வழங்கினார். இத்திட்டத்தில் 38 லட்சம் பேருக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்தில் ஏராளமான திட்டங்களை முதல்வர் செயல்படுத்தியுள்ளார். ரூ.300 கோடி மதிப்பில் சிப்காட் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆலங்குளம் தென்காசி இடையே நான்குவழிச் சாலை திட்டம் ரூ.251 கோடியில் நடைபெறுகிறது. திருநெல்வேலி ஆலங்குளம் நான்குவழிச் சாலை திட்டம் நடைபெற்று வருகிறது. ரூ.15 கோடி மதிப்பில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுளளது.

முற்போக்கான திட்டங்களால் இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்துள்ளது. 11.19 சதவீத வளர்ச்சியுடன் சிறப்பான இடத்தில் தமிழ்நாடு உள்ளது. இந்தியாவிலேயே முதல்முறையாக மகளிர் சுய உதவி குழுக்களை ஆரம்பித்தவர் முள்ளாள் முதல்வர் கருணாநிதி. ஆரம்பத்தில் சுய உதவிக் குழுக்கள் மூலம் கடன் இணைப்பு பெற்று, அதை குடும்ப தேவைகளுக்கு பயன்படுத்தி வந்தீர்கள். இப்போது, கடனுதவி வழங்கி உங்களை தொழில் முனைவோராக மாற்றியுள்ளார் தமிழக முதல்வர். மகளிர் குழுக்களுக்கு அடையாள அட்டை புகைப் படத்துடன் வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவி குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை 25 கிலோ வரை 100 கிலோ மீட்டர் வரை கட்டணமின்றி பேருந்துகளில் எடுத்துச் சென்று விற்பனை செய்யலாம். கடந்த 5 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடனுதவிகளை நல்ல முறையில் பயன்படுத்தி, பெரிய தொழில்முனைவோராகி மற்றவர்களுக்கு வேலை கொடுக்கும் அளவுக்கு உங்கள் வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

அரசு அலுவலகங்களை தேடி பட்டா வாங்க காத்திருந்த நிலை மாறி அரசே உங்களை தேடி வந்து பட்டா வழங்குகிறது. வேளாண்துறைக்கு தனி பட்ஜெட் கொண்டுவரப்பட்டது. விவசாயிகள் நலன் காக்கும் அரசாக திராவிட மாடல் அரசு உள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குவதுடன், அவர்களது உரிமைகளையும் உறுதி செய்கிறது. உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளின் குரல் எதிரொலிக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேய முதல் மாநிலமாக தமிழகத்தில் நியமன அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்வு செய்யும் முறையை தமிழக முதுல்வர் செயல்படுத்தி உள்ளார்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் திராவிட மாடல் அரசு செயல்படுகிறது. மக்களுடன் மக்களாக களத்தில் நிற்கும் ஒரே முதல்வர் நமது முதல்வர். ஒவ்வொரு நாளும் மக்களுக்காக அயராது உழைக்கிறார். அடுத்து வரும் திராவிட மாடல் 2.O ஆட்சியில் இன்னும் அதிக திட்டங்களை முதல்வர் செயல்படுத்துவார். இந்த அரசுக்கு பக்கபலமாக இருந்து, தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்க வேண்டும்” என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இவ்விழாவில் தென்காசி தொகுதி எம்.பி டாக்டர் ராணி ஸ்ரீகுமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.பழனி நாடார், ஈ.ராஜா, டாக்டர் சதன் திருமலைக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அணு குண்டுகளை சுமந்து செல்லும் திறன் கொண்ட அமெரிக்காவின் அதிநவீன ஏவுகணை சோதனை



வாஷிங்டன், மார்ச்.7-

அணு குண்டுகளை சுமந்து செல்லும் திறன் கொண்ட அதிநவீன ஏவுகணையை அமெரிக்க விமானப்படை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க விமானப் படை வட்டாரங்கள் கூறியதாவது: கடந்த 1962ல் 'மினிட்மேன்மி' ஏவுகணையும் கடந்த 1965ம் ஆண்டில் 'மினிட் மேன் மிமி' ஏவுகணையும் அமெரிக்க விமானப் படையில் சேர்க்கப்பட்டன. கடந்த 1970ம் ஆண்டில் 'மினிட்மேன் மிமிமி' ஏவுகணை விமானப் படையில் சேர்க்கப்பட்டது.

தற்போது இந்த வகையை சேர்ந்த 400 ஏவுகணைகள் அமெரிக்காவின் மோன்டானா, நார்த் டகோடா, வயோமிங் பகுதிகளில் நிலைநிறுத்தப்பட்டு உள்ளன. 'மினிட் மேன் மிமிமி' ஏவுகணையின் திறன் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சூழலில் அதிவேகத்தில், அதிக தொலைவு சீறிப் பாயும் 'மினிட்மேன் மிமிமி' ஏவுகணையின் சோதனை மார்ச் 3ம் தேதி இரவு 11.01 மணிக்கு (பசிபிக் நேரம்) நடத்தப்பட்டது.

அமெரிக்காவின் வாண்டன்பெர்க் விண்வெளி படைத் தளத்தில் இருந்து புறப்பட்ட ஏவுகணை, மார்ஷல் தீவுகளுக்கு அருகே நிலைநிறுத்தப்பட்டிருந்த 2 இலக்குகளை மிகத் துல்லியமாக தாக்கி அழித்தது. 'மினிட்மேன் மிமிமி' ஏவுகணை மூலம் ஒரே நேரத்தில் பல்வேறு இலக்குகளை தனித்தனியாக தாக்கி அழிக்க முடியும்.

இந்த ஏவுகணை முதலில் விண்வெளியின் வளிமண்டலத்தை தாண்டிச் செல்லும். பின்னர் விண்வெளியில் இருந்து மீண்டும் வளிமண்டலத்துக்குள் நுழைந்து தரையில் உள்ள இலக்குகளை மிக துல்லியமாக தாக்கி அழிக்கும். 36,000 கிலோ எடை, 59.5 அடி நீளம், 5.5 அடி விட்டம் கொண்ட ஒரு ஏவுகணையில் 3 அணு குண்டுகள் வரை சுமந்து செல்ல முடியும்.

இந்த ஏவுகணை மணிக்கு 24,000 கி.மீ. வேகத்தில் சீறிப் பாயும். சுமார் 13,000 கி.மீ. தொலைவு வரையிலான இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கும். 'மினிட் மேன் மிமிமி' ஏவுகணை மூலம் உலகின் எந்த பகுதியையும் 30 நிமிடங்களில் தாக்கி அழிக்க முடியும். இவ்வாறு அமெரிக்க விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்கா, ஈரான் இடையிலான போரில் ஈரான் ராணுவத்துக்கு ரஷ்யாவும் சீனாவும் மறைமுகமாக உதவி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த சூழலில் ஈரான், சீனா, ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் டூம்ஸ்டே (அழிவு நாள்) ஏவுகணை என்றழைக்கப்படும் 'மினிட் மேன் மிமிமி' ஏவுகணை சோதனையை அமெரிக்கா நடத்தியிருப்பது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

# குறைந்தபட்ச ஆதார விலையில் மக்காச்சோளத்தை அரசு கொள்முதல் செய்ய வேண்டும்: ராமதாஸ்



சென்னை, மார்ச்.7-

தமிழ் நாட்டில் குறைந்தபட்ச ஆதார விலை திட்டத்தின்கீழ் மக்காச்சோளத்தை மாநில அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கால்நடைகளுக்கான தீவனத்தை தயாரிப்பதற்கும், எத்தனால் தயாரிப்பதற்கும் மக்காச்சோளம் மிக முக்கியமான மூலப் பொருளாக பயன்பட்டு வருகிறது. மத்தியபிரதேசம், உத்தரபிரதேசம், கர்நாடகம், ராஜஸ்தான், பிஹார், ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் மக்காச்சோளம் பரவலாக பயிரிடப்பட்டு வருகிறது. மக்காச்சோள சாகுபடியில் ஈடுபடுமாறு மத்தியமாநில அரசுகள் தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றன.

2017ரூ-18 முதல் 2023ரூ-24 வரை சராசரியாக 369.79 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரடப்பட்டு 26.59 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவில் மக்காச்சோள உற்பத்தியில் மத்திய பிரதேசம் முதலிடத்தையும், அடுத்து கர்நாடகா, மஹாராஷ்ட்ரா என 6வது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. தமிழ்நாட்டில் மக்காச்சோள உற்பத்தியில் கள்ளக்குறிச்சி, அரியலூர், தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர், தென்காசி, தருமபுரி மற்றும் பெரம்பலூர் முன்னிலையில் உள்ளது.

அண்மையில் பெரம்பலூரில் அனைத்து விவசாயிகள் சங்கம் சார்பில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,400 கொள்முதல் விலை அறிவித்து, அதை நிறைவேற்றாத மத்திய, மாநில அரசுகளை கண்டித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கட்டுப்படியான விலையை பெறுவதற்கு அரசை எதிர்த்து இன்னமும் விவசாயிகள் போராடத்தான் வேண்டியுள்ளது.

நடப்பு ஆண்டு மக்காச்சோளத்திற்கு மத்திய வேளாண் விலை நிர்ணய ஆணையம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,400 ஆதார விலையாக அறிவித்துள்ளது. பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஒரு குவிண்டால் மக்காச்சோளத்தை அதிக பட்சமாக ரூ.1,600 கொடுத்து தனியார் வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர். தமிழக அரசின் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு வரும் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து ரூ.1,700க்கு கீழ் மட்டுமே கொள்முதல் செய்து வருவதாக கூறப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்காவிலிருந்து வரிவிலக்குடன் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்துள்ள மத்திய அரசை கண்டிக்கிறேன். மத்திய அரசு குவிண்டால் ரூ.2,400 என குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்துள்ளது. தமிழ் நாட்டில் குறைந்தபட்ச ஆதார விலை திட்டத்தின்கீழ் மக்காச்சோளத்தை மாநில அரசு கொள்முதல் செய்ய வேண்டும்.

உத்தர பிரதேச அரசின் கூட்டுறவுத் துறை சார்பில் மக்காச்சோளத்தை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஆதார விலை திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்து வருகிறது. கர்நாடக மாநிலம் ஒவ்வொரு விவசாயிடமிருந்தும், 50 குவிண்டால் வரை குறைந்தபட்ச ஆதார விலை திட் டத்தின்கீழ் தனது மாநில கூட்டுறவு துறை மூலமாக கொள்முதல் செய்து வருகிறது.

தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு உரிய வகையில் கோரிக்கை வைத்து, தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஆதார விலை திட்டத்தின்கீழ் மக்காச்சோளத்தை கொள்முதல் செய்ய கட்டமைப்பும், வேளாண் துறையின் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் இருக்கிறது. இதை பயன்படுத்தி விவசாயிகளை பாதுகாக்க அண்டை மாநிலங்களைப் போல இழப்பீட்டு மானியம் வழங்கி ஈடு செய்து விவசாயிகளை காத்திட அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 5 ஆண்டுகளில் 30 சிப்காட் தொழில் வளாகங்கள்



சென்னை, மார்ச்.7-

திமுக ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் 30 சிப்காட் தொழில் வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 816 புதிய தொழிற்சாலைகளுக்கு 7,558 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் 2021ல் ஆட்சி பொறுப்பேற்றபின் தமிழகத்தை 2030க்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக உயர்த்த இலக்கு நிர்ணயித்தார்.

அதைத்தொடர்ந்து, தமிழகம், வெளிநாடுகளில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழகத்துக்கு முதலீடு செய்ய வரும்படி முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். அதை யேற்று பலர் முன்வந்தனர். அந்த முதலீட்டாளர்களுக்கு நிலம் வழங்க 5 ஆண்டுகளில் 30 புதிய தொழில் பூங்காக்கள் தொடங்கப்பட்டு, 816 புதிய தொழில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 7,588.798 ஏக்கர் நிலத்தை சிப்காட் நிறுவனம் ஒதுக்கியுள்ளது.

குறிப்பாக, தூத்துக்குடியில் வின்பாஃஸ்ட் மின்வாகனத் தொழிற்சாலை, ராணிப்பேட்டையில் ஜாகுவார் லேண்டு ரோவர் கார் தொழிற்சாலை, ஜெயங்கொண்டத்தில் காலணி தொழிற்சாலை, கிருஷ்ணகிரியில் டெல்டா எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலை என பல தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

மேலும், பல தொழிற்சாலைகள் தொடர்ந்து திறக்கப்பட உள்ளன. இதன்மூலம் லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இவற்றின் காரணமாக தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாக சிறந்து விளங்குகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# "திருச்சி மாநாட்டில் முக்கிய அறிவிப்புகளை முதல்வர் வெளியிடுவார்": அமைச்சர் கே.என்.நேரு



திருச்சி, மார்ச்.7-

"திருச்சி மாநாடு முழுக்க திமுக மாநாடு. கூட்டணி கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா ? என்பது குறித்து எனக்கு தெரியாது" என்று அமைச்சர் கே.என்.நேரு கூறியுள்ளார்.

திருச்சி மாவட்டம் சிறுகனூரில் வரும் 9ம் தேதி நடைபெறும் திமுக மாநில மாநாட்டு திடலை நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கே.என்.நேரு கூறுகையில், "முதல்வர் ஸ்டாலின் கடந்த 2021ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் இதே இடத்தில், பாசனம், மருத்துவம், கல்வி வசதி உள்ளிட்ட 7 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு வெற்றி பெற்றார்.

அதேபோன்று இந்த மாநாட்டிலும் தமிழக நிதி நிலைக்கு ஏற்ப வருங்கால திட்டம் குறித்த அறிவிப்புகளை வெளியிடுவார். மாநாட்டில் 10 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று லட்சம் நாற்காலிகள் போடப்பட்டுள்ளது. போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வண்ணம் விரிவான ஏற்பாடுகளை காவல் துறை செய்துள்ளது. எனவே போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்பில்லை. 10 மருத்துவக் குழுக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அனைவருக்கும் குடிநீர், கழிப்பறை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 24 ஆயிரம் வாகனங்கள் வரும் என போலீஸ் சார்பில் கூறப்பட்டுள்ளது. போதுமான வாகன நிறுத்தும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க திமுக மாநாடு. கூட்டணி கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து எனக்கு தெரியாது. திமுக தலைவர் ஸ்டாலின் தான் தெரிவிப்பார். முதல்வர் ஸ்டாலின் மாலை 5.30க்கு மணிக்கு மாநாட்டு திடலுக்கு வருவார்" என்று கூறினார்.

# சென்னை மருத்துவக் கல்லூரியில் அரசு மருத்துவர்கள் உண்ணாவிரத போராட்டம்

சென்னை, மார்ச்.7-

கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி, சென்னை மருத்துவக் கல்லூரியில் அரசு மருத்துவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியால் கொண்டு வரப்பட்ட அரசாணை 354ன் படி, மருத்துவர்களுக்கு உரிய காலமுறை ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வுகளை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு மருத்துவர்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

தீர்வு கிடைக்காத நிலையில், சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் அரசு மருத்துவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று தொடங்கினர்.

அனைத்து அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில ஒருங் கிணைப்பாளர்கள் பாலகிருஷ்ணன், ராமலிங்கம், அகிலன் ஆகியோர் தலைமையில் உண்ணாவிர போராட்டம் நடைபெற்றது.

இது தொடர்பாக, மருத்துவர் அகிலன் கூறும்போது, 'அரசின் இறுதி முடிவு வரும் வரை, நோயாளிகளுக்கு எவ்வித இடையூறும் இன்றி மருத்துவமனை வளாகத்திலேயே காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடரத் தீர்மானித்தோம்.

இருப்பினும், மருத்துவமனை வளாகத்தில் போராட்டம் நடத்தக் கூடாது என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனவே, தற்காலிகமாக எங்களது போராட்டத்தை தள்ளி வைக்கிறோம்.

விரைவில் காவல் துறையிடம் உரிய அனுமதி பெற்று போராட்டத்தைத் தொடங்குவோம்" என்றார்.

# தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் அரசியல், மதம் சார்ந்த நிகழ்ச்சி நடத்த தடை




சென்னை ,மார்ச்.7-

தனியார் பள்ளிகளில் அரசியல் மற்றும் மதம் சார்ந்த நிகழ்வுகள், பிரிவினையைத் தூண்டும் நிகழ்வுகளை நடத்த பள்ளிக்கல்வித் துறை தடை விதித்துள்ளது.

தமிழக பள்ளிக்கல்வித் துறையின்கீழ் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகள் இயங்கி வருகின்றன. தனியார் பள்ளிகளில் சாதி, மதம் சார்ந்த நிகழ்வுகள் நடத்தப்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதை தவிர்ப்பதற்காக தனியார் பள்ளிகள் சட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்து அரசிதழில் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி தனியார் பள்ளிகளில் அரசியல், மதம் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் பிரிவினையைத் தூண்டும் நிகழ்வுகளை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பள்ளி கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன் வெளியிட்டுள்ள உத்தரவில், "தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சட்ட விதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, தனியார் பள்ளிகள் அங்கீகாரம் பெறுவதற்குரிய கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

அதே போல், பள்ளி வளாகத்தை அரசியல், கருத்தியல், வகுப்புவாத, பிரிவினைவாத மற்றும் கல்வி நோக்கமற்ற நிகழ்ச்சி, கூட்டம், பிரச்சாரம் ஆகியவற்றை நடத்த பயன்படுத்தக் கூடாது.

கலாச்சார நிகழ்வுகள், சமூக சேவை திட்டங்கள், ரத்ததான முகாம்கள், நினைவு விழாக்கள் போன்ற செயல்பாடுகள், அவை மதம், அரசியல் சாராமல், பள்ளியின் நேரடி மேற்பார்வையில் நடத்தப்பட்டால் மட்டுமே அனுமதிக்கப்படும்.

மேலும், இதுசார்ந்து அரசால் குறிப்பிடப்படும் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் முன் அனுமதி பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

ஆர்எஸ்எஸ் மற்றும் சிறுபான்மையின அமைப்புகள் பள்ளி வளாகங்களில் தொடர்ந்து மதம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்துவதாக கல்வித்துறைக்கு புகார்கள் வந்தன. அதைத்தொடர்ந்து தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் சனிப்பெயர்ச்சி விழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



காரைக்கால், மார்ச்.7-

காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் இன்று (மார்ச் 6) நடைபெற்ற சனிபகவான் கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு இடம் பெயர்ந்த சனிப்பெயர்ச்சி விழாவில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

திருநள்ளாறில் சனி பகவானுக்கு தனி சந்நிதியுடன் அமைந்துள்ள பிரணாம்பிகை உடனுறை தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் இன்று சனிப்பெயர்ச்சி விழா சிறப்பான வகையில் நடைபெற்றது. இக்கோயிலில் அனுக்கிரக மூர்த்தியாக சனிபகவான் அருள் பாலிக்கிறார். சனிபகவான் மகர ராசியிலிருந்து கும்ப ராசிக்கு இடம் பெயர்ந்த கடந்த சனிப்பெயர்ச்சி விழா 2023ம் ஆண்டு டிச.20 ம் தேதி நடைபெற்றது.

இம்முறை சனிபகவான் கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு இடம் பெயர்ந்துள்ளார். இவ்விழாவையொட்டி சனீஸ்வரபகவானுக்கு இன்று காலை நல்லெண்ணெய், மஞ்சள், திரவியப் பொடிகள், சந்தனம், பன்னீர், பழங்கள், பஞ்சாமிர்தம், தேன், தயிர் உள்ளிட்ட பொருட்களை கொண்டு சிறப்பு அபிஷேகம் நடத்தப்பட்டு பின்னர் வஜ்ர அங்கி அணிவிக்கப்பட்டு, சகஸ்ரநாம அர்ச்சனை செய்யப்பட்டது. பின்பு திரையிடப்பட்டு நெய்வேத்தியம் செய்யப்பட்டு, சனிப்பெயர்ச்சி நிகழ்வை குறிக்கும் வகையில், சரியாக காலை 8.24 மணிக்கு திரை விலக்கப்பட்டு, சனீஸ்வரபகவானுக்கு மகா தீபாராதனைக் காட்டப்பட்டது.

சனிப்பெயர்ச்சி விழாவுக்கு வரும் பக்தர்கள் நளன் குளத்தில் மூழ்கி நீராடி குளக்கரையில் உள்ள நளன் கலிதீர்த்த விநாயகர் கோயிலில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்துவிட்டு தர்பாரண்யேஸ்வரர் கோயிலுக்கு வந்து சனிபகவானை வழிபட்டு செல்வது ஐதீகம். அதன்படி தோஷ நிவர்த்திக்காக பக்தர்கள் அதிகாலை முதலே நளன் குளத்தில் நல்லெண்ணெய் தேய்த்து நீராடினர். தொடர்ந்து கலி தீர்த்த விநாயகர் கோயிலில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்துவிட்டு தர்பாரண்யேஸ்வரர் கோயிலுக்குச் சென்றனர்.

பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு ஏதுவாக கட்டணமில்லா தரிசனம் மற்றும் ரூ.300, ரூ.600, ரூ.1000 கட்டண தரிசன வரிசைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. கோயிலினுள் வடக்குப் பிரகார மண்டபத்தில் உற்சவரான சனீஸ்வர பகவான் நேற்று இரவு முதல் தங்க காக வாகனத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார். பக்தர்கள் இங்கும் தரிசித்துச் சென்றனர்.

விழாவில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கே.கைலாஷ்நாதன், தருமபுரம் ஆதீனம் 27 வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் உள்ளிட்ட பல்லாயிரம் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# ஓபிஎஸ் மீது பதியப்பட்ட 4 தேர்தல் வழக்கு ரத்து



சென்னை, மார்ச்.7-

கடந்த 2024ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது ராமநாதபுரம் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் விதிமீறல்களில் ஈடுபட்டதாக பரமக்குடி, திருவாடானை, திருப்புல்லாணி, கீழக்கரை காவல் நிலையங்களில் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த வழக்குகளை ரத்து செய்யக்கோரி ஓபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது ஓபிஎஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராஜலட்சுமி, ''தேர்தல் விதிமீறல்களில் ஈடுபட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புகார் அளிக்காத நிலையில், காவல்துறை அதிகாரிகள் அளித்த புகாரின் பேரில் இந்த வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

ஒரு வழக்கில் காலதாமதமாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்குகளை ரத்து செய்ய வேண்டும்'' என வாதிட்டார். அதையடுத்து நீதிபதி, 4 வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்



# "தமிழகத்தை போதை மாநிலமாக மாற்ற சதி" நெல்லையில் செல்வப்பெருந்தகை ஆவேசம்

நெல்லை, மார்ச்.7-

"தமிழகத்தை சீரழிக்க வேண்டும் என்ற நோக்கில், போதைப்பொருள் புழக்கம் தூண்டப்படுகிறதா என கேள்வி எழுகிறது" என்று தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை கூறினார். நாங்குநேரி அருகே பெரும்பத்தில் சம்பவத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நெல்சன் மற்றும் கணேசனை தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இதுபோல் பெரும்பத்தில் உயிரிழந்த ஜான் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "நெல்சன், கணேசன் ஆகிய இருவருக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தலா ரூ.1 லட்சம் நிதியுதவி வழங்கப்படும். உயிரிழந்த ஜான் குடும்பத்துக்கு ரூ.6 லட்சம் நிதியுதவி அளிக்கப்படும். அவரது குழந்தைகளின் கல்விச் செலவை காங்கிரஸ் ஏற்கும். சென்னையில் ரவுடிகளை ஒடுக்குவதில் காவல்துறை ஆணையர் அருண் காட்டும் தீவிரத்தைப் போல், திருநெல்வேலி சரக காவல்துறையும் ரவுடிகளின் பட்டியலை தயார் செய்ய வேண்டும். அந்தந்த பகுதி காவல் நிலைய ஆய்வாளர்கள் மற்றும் உளவுத் துறையினர் தங்கள் எல்லையில் நடக்கும் குற்றங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

அசம்பாவிதம் நடக்கும் முன்பே அதை தடுக்க தவறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். திருநெல்வேலி காவல்துறையின் வசதிகள் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தத் தமிழக அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சமீபகால வன்முறைச் சம்பவங்களுக்குப் போதைப்பொருள் புழக்கமே முக்கிய காரணம். ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்துக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. தமிழகத்தை சீரழிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தப் போதைப்பொருள் புழக்கம் தூண்டப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. ஒரு சில சமூக விரோத கும்பல்கள் திட்டமிட்டு இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுவது பெரும் சங்கடத்தை ஏற்படுத்துகிறது" என்று அவர் தெரிவித்தார்.

# "அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையே மத்தியஸ்தம் செய்யத் தயார்" சீனா அறிவிப்பு

பெய்ஜிங், மார்ச்.7-

அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையே போரை நிறுத்துவதற்கு மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று சீனா அறிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் கடந்த 10 ஆண்டுகளாக இல்லாத வகையில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், ஈரானைக் கட்டுப்படுத்த அந்நாட்டின் ஏவுகணை உற்பத்தி மையங்கள், அணு சக்தி மையங்களை குறி வைத்து இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதலில் ஈரானில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,000த்தைத் தாண்டி உள்ளது. இதனிடையே, அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையே ஏற்பட்டுள்ள போரை நிறுத்துவதற்கு மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று சீனா நேற்று அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் கூறியதாவது: அமெரிக்கா, இஸ்ரேல் ஈரான் இடையே ஏற்பட்டுள்ள போரை பேச்சு வார்த்தை மூலம் நிறுத்தலாம். போரை நிறுத்துவது தொடர்பாக இரு நாடுகளும் நிதானத்தைக் கடைப்பிடிக்கலாம். இதற்காக இரு நாடுகளிடையே மத்தியஸ்தம் செய்ய சீனா தயாராக உள்ளது.

போரை நிறுத்துவது தொடர்பாக ஐக்கிய அரபு அமீரகத்தின் துணைப் பிரதமர் அப்துல்லா பின் சயீத் அல் நஹ்யான் உட்பட வளைகுடா பிராந்தியம் முழுவதிலும் உள்ள அரசியல் தலைவர்களுடன் சீன அமைச்சர் வாங் யி தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் ஐக்கிய அரபு அமீரகத்தை, சீனா ஆதரிக்கும். பேச்சு வார்த்தை மூலம் போரை நிறுத்த முயற்சிப்பதில் மற்ற வளைகுடா நாடுகளையும் சீனா ஆதரிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கலிங்கப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

# ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா 'தற்காலிக' அனுமதி!

புதுடெல்லி, மார்ச்.7-

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க இந்தியாவுக்கு 30 நாட்கள் விலக்கு அறிவித்துள்ளது அமெரிக்கா. இருப்பினும், இதில் சில கட்டுப்பாடுகள் இந்த அறிவிப்பில் இடம்பெற்றுள்ளது. அது குறித்து விரிவாக பார்ப்போம்.





ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போர் தொடுத்துள்ளதால் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் ஏற்பட்டு சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது.

இந்தப் போர் தொடர்ந்தால் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வரும் நாடுகளில் வரும் நாட்களில் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடலில் சரக்கு கப்பலில் உள்ள ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்க இந்தியாவுக்கு அமெரிக்கா தற்காலிக அனுமதி அளித்துள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தற்போது வாங்கும் கச்சா எண்ணெய் சரக்கு (கார்கோ) பெட்டகத்தில், அமெரிக்கா இப்போது அறிவித்துள்ள தற்காலிக அனுமதிக்கு முன்னதாக ஏற்றப்பட்டு இருக்க வேண்டும். அதேபோல, அமெரிக்காவின் வரி ஏற்ற அறிவிப்பின் காரணமாக மற்ற நாடுகளுக்காக ஏற்றுமதி செய்யப்பட்டு, கடலில் தேக்கம் அடைந்திருக்கும் ரஷ்ய கச்சா எண்ணெய் சரக்குகளையும் இந்தியா இப்போது வாங்கலாம் என சில கட்டுப்பாடுகளையும், நிபந்தனைகளையும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

ரஷ்யா இந்தியா அமெரிக்கா: கச்சா எண்ணெய் பின்னணி

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை ஐரோப்பிய நாடுகள் நிறுத்தின. இந்தியா தொடர்ந்து மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்கியது. இது உக்ரைன் மீதான போருக்கு ரஷ்யாவை ஊக்குவிப்பதாக இருக்கும் என்று இந்தியாவுக்கு கூடுதல் வரி விதித்தார் ட்ரம்ப்.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் இந்தியாவுக்கான வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைத்தது, இதையடுத்து கடந்த சில வாரங்களாக ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்தது.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கச்சா எண்ணெய் வாங்குவது கண்டுபிடிக்கப்பட்டால், அமெரிக்கா 25 சதவீத கூடுதல் வரியை மீண்டும் விதிக்கும் எனவும் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது இதில்தான் இந்தியாவுக்கு விலக்கு அறிவித்துள்ளது அமெரிக்கா.

இதனிடையே, இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் விநியோகம் செய்ய ரஷ்யா எப்போதும் தயார் என்று இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் டெனிஸ் அலிபோவ் கூறியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

# உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரி பதவியேற்கிறார்

சென்னை, மார்ச்.7-

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்த எம்.எம். ஸ்ரீவஸ்தவா நேற்றுடன் பணிஓய்வு பெற்ற நிலையில், புதிய தலைமை நீதிபதியாக கேரள உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றிய சத்தீஷ்கர் மாநிலத்தை சேர்ந்த சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரியை சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது.



அதை ஏற்ற குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரியை நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் 55 வது புதிய தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரிக்கு ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி மதியம் 12.30 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கவுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரைச் சேர்ந்த அர்விந்த் ஹெச். தர்மாதிகாரி மற்றும் மறைந்த சுபா தர்மாதிகாரிக்கு கடந்த 1966 ஜூலை 8 அன்று பிறந்த நீதிபதி சுஷ்ருத் அர்விந்த் தர்மாதிகாரி, மகாராஷ்டிரா மாநிலம், நாக்பூர் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று 1992ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்தார்.

மத்திய பிரதேச உயர் நீதிமன்றத்தில் கடந்த 2000 2015 காலகட்டத்தில் வருமான வரித்துறை, வங்கி மற்றும் மத்திய அரசு துறைகளில் மத்திய அரசு வழக்கறிஞராக பணியாற்றிய அவர், கடந்த 2016ம் ஆண்டு மத்திய பிரதேச உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

பின்னர் 2018ம் ஆண்டு நிரந்தர நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கடந்தாண்டு ஏப்ரலில் கேரள உயர் நீதிமன்றத்துக்கு இடமாறுதல் செய்யப்பட்டார்.



# ஈரான் போர்க் கப்பல் மூழ்கியபோது மீட்புப் பணியில் ஈடுபட்ட இந்திய கடற்படை

புதுடெல்லி, மார்ச்.7-

இந்திய கடற்படை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 4ம் தேதி அதிகாலை ஈரான் போர்க் கப்பல் ஐஆர்ஐஎஸ் டேனாவில் இருந்து அவசர உதவி கோரி கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு தகவல் அனுப்பப்பட்டது.

இலங்கையின் காலே பகுதியில் இருந்து 20 கடல் மைல் தொலைவில் ஈரான் போர்க்கப்பல் கடலில் மூழ்கியது. இது இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதி ஆகும். இந்திய கடற்படைக்கு தகவல் கிடைத்ததும் உடனடியாக மீட்புப் பணியில் களமிறங்கினோம். ஐஎன்எஸ் தரங்கிணி கப்பல் சம்பவ பகுதிக்கு அனுப்பப்பட்டது. கொச்சியில் இருந்து ஐஎன்எஸ் இக்சாக் கப்பலும் சம்பவ பகுதிக்கு சென்றது.

இலங்கை கடற்படையோடு இணைந்து இந்திய கடற்படையும் மீட்புப் பணியில் ஈடுபட்டது. இந்திய கடற்படையின் கண்காணிப்பு விமானம் சம்பவ பகுதிக்கு விரைந்து சென்று உயிர் காக்கும் ஜாக்கெட்டுகளை வீசியது. இலங்கையோடு இணைந்து தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

# 'திமுக ஆட்சியில் பட்டியலின மக்கள் உட்பட யாருக்கும் பாதுகாப்பு இல்லை' பாஜக

சென்னைஇ மார்ச்.7-

'சர்வாதிகாரியாக மாறுவேன்', 'தலைகுனிய விட மாட்டேன்' என வெற்றுக் கூச்சலிடுவதை நிறுத்தி விட்டு முதல்வர் ஸ்டாலின் செயலில் வீரத்தை காட்ட வேண்டும் என தமிழக பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.





இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எழுதிக் கொடுக்கும் வசனங்களை பேசுவதில், அரசியல் நாவணிகம் செய்வதில் வல்லவர் என்பதை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பொய்யான தேர்தல் வாக்குறுதிகள் வழங்கி சூழ்ச்சி செய்து தேர்தலில் வெற்றி பெற்று நிரூபித்து விட்டார். 'தேவைப்பட்டால் சர்வாதிகாரியாக மாறுவேன்' என சவால் விட்டு அரசியல் நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

இப்போது, 'தமிழகத்தை தலைகுனிய விட மாட்டேன்' என வீர வசனம் பேசி வருகிறார். ஆனால், தமிழகத்தில் நாள்தோறும் நடப்பதை பார்க்கும்போது, இவையெல்லாம் வெறும் வாய்ச் சவடால்கள், வெற்றுக் கூச்சல்கள் என்பதை மக்கள் அறிந்தே வைத்திருக்கிறார்கள். முதல்வராக இருக்கும் மு.க.ஸ்டாலின் தான் காவல் துறையையும் கவனித்து வருகிறார். ஆனால், தமிழகத்தில் என்ன நடக்கிறது என்பது அவருக்கு தெரியவில்லை அல்லது தெரிந்தும் தெரியாதது போல நடித்துக் கொண்டிருக்கிறாரா? என்பதும் தெரியவில்லை.

இரு நாட்களுக்கு முன்பு சிவகங்கை மாவட்டம், இடைக்காட்டூர் கிராமத்திற்குள், இரு சக்கர வாகனங்களில், அரிவாள், பட்டாகத்திகளுடன் வந்த ஒரு கும்பல், கண்ணில் கண்டவர்களை எல்லாம் அரிவாளால் வெட்டி கொடூரமாக தாக்கியுள்ளது. இதற்கு சில நாள்களுக்கு முன்பு, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே உள்ள பெரும்பத்து கிராமத்தில் நுழைந்த கும்பல், அங்குள்ள தேநீர் கடை மீது பெட்ரோல் குண்டு வீசியது. கிராமத்தில் உள்ள அப்பாவி பொதுமக்களை அக்கும்பல் அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் தாக்கியதில் இரண்டு பேர் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த வன்முறை சம்பவங்கள் பற்றிய காட்சிகள் ஊடகங்களில் வெளியாகி மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன. குற்றவாளிகளுக்கு காவல்துறை மீது துளியும் அச்சம் இல்லாததே இதுபோன்ற வன்முறை சம்பங்களுக்கு காரணம். காவல்துறையை சுதந்திரமாக செயல்பட விடாமல் திமுகவினர் தங்கள் ஏவல் துறையாக மாற்றியுள்ளனர். தமிழகத்தில் நகரங்கள் மட்டுமல்லாது குக்கிராமங்கள் வரை கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் தாராளமாக கிடைக்கின்றன. இதுவும் வன்முறைக்கு காரணமாக உள்ளன.

ஆனால், போதைப் பொருட்களை ஒழிக்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதுபற்றி பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினால், தமிழகத்தில் போதைப் பொருட்கள் தயாரிக்கப்படுவதில்லை, வெளிமாநிலங்களில் இருந்துதான் வருகிறது என அமைச்சர்களே சப்பைக்கட்டு கட்டுகின்றனர். வெளிமாநிலங்களில் இருந்து போதைப் பொருட்கள் வந்தால் அதை தடுப்பதுதானே காவல்துறையின் பணி. திமுக அரசை விமர்சிப்பவர்களை கைது செய்வதிலும், எதிர்க்கட்சிகள் கூட்டம் நடத்தினால், ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதை ஒடுக்குவதிலும்தான் திமுக அரசின் காவல் துறை சிறப்பாக செயல்படுகிறது. குற்றவாளிகளை ஒடுக்குவதில், சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில், போதைப் பொருட்களை ஒழிப்பதில் காவல்துறையின் செயல்பாடு பூஜ்யமாக உள்ளது.

திமுக ஆட்சியில் நடக்கும் வன்முறைச் சம்பவங்கள் பெரும்பாலும் பட்டியலின மக்களுக்கு எதிராகவே நடக்கிறது. ஆனால், கொஞ்சம் கூட கூச்சமில்லாமல் சமூக நீதி பற்றி முதல்வர் ஸ்டாலினும், அமைச்சர்களும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

திமுக ஆட்சியில் பட்டடியலின மக்கள், பழங்குடியினர், பெண்கள், பொதுமக்கள் என யாருக்கும் பாதுகாப்பு இல்லை. சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, விலைவாசி உயர்வு, அரசு அலுவலகங்களில் தலைவிரித்தாடும் லஞ்சம், திமுக கவுன்சிலர்களின் வசூல் வேட்டை ஆகியவற்றால் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவற்றையெல்லாம் சில ஆயிரம் ரூபாய் பணம் கொடுப்பதன் மூலம் மடைமாற்றி விடலாம்; வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மக்களை மீண்டும் ஏமாற்றி வென்று விடலாம் என முதல்வர் ஸ்டாலின் கனவு காண்கிறார். 1969ல் எம்ஜிஆர் ஆதரவுடன் கருணாநிதி முதல்வராகவும், திமுக தலைவராகவும் ஆனார். அதன்பிறகு தொடர்ந்து இரண்டு முறை திமுக சட்டமன்றத் தேர்தலில் வென்றதாக வரலாறு இல்லை. வரும் சட்டமன்றத் தேர்தலிலும் இந்த வரலாறு தொடரும். திமுகவை மக்கள் தோற்கடிக்கப் போவது உறுதி" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 6.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 32 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 55.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 185 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 7,127 பயனாளிகளுக்கு 44.05 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீகுமார். சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார், ஈ.ராஜா, மரு.தி.சதன்திருமலைக்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், நகராட்சி உறுப்பினர் வே.ஜெயபாலன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




## மக்களின் கோரிக்கை நிறைவேற்றம்: விருகல்பட்டி தார் சாலைப் பணிகளைத் துவக்கி வைத்தார் பொள்ளாச்சி எம்.பி

குடிமங்கலம், மார்ச்.7-

குடிமங்கலம் வடக்கு ஒன்றியம், பெரியபட்டி நெகமம் சாலை முதல் விருகல்பட்டி வரை சுமார் ரூ. 69 லட்சத்து 46 ஆயிரம் மதிப்பீட்டில் தார் சாலை பலப்படுத்தும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தப் புதிய சாலைப் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளரும், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினருமான கே. ஈஸ்வரசாமி எம்.பி. அவர்கள் நேரில் கலந்து கொண்டு, பூமி பூஜை செய்து பணிகளைத் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சா.ராஜமாணிக்கம், குடிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.முரளி, குடிமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் கவிதா கிரி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ரகுபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாத், ராஜேந்திரன், ஒன்றிய நிர்வாகிகள் உதயகுமார், லட்சுமி, கிளை கழக செயலாளர் ஜெயபிரகாஷ், யூகநாதன், கோபால், பண்ணாரி, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் மங்கையர்க்கரசி, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## பணி நீக்கம் செய்யப்பட்ட அண்ணா பல்கலை. தற்காலிக உதவி பேராசிரியர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்க முதல்வருக்கு வேண்டுகோள்

சென்னை, மார்ச்.7-

அண்ணா பல்கலை. உறுப்புக் கல்லூரிகள் மற்றும் மண்டல வளாகங்கள் தற்காலிக உதவி பேராசிரியர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் ஜெய்சன், ராஜ்குமார், கோசலை ஆகியோர், சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று கூறுகையில், அண்ணா பல்கலை.யின் 13 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 3 மண்டல வளாகங்களில் 328 தற்காலிக உதவி பேராசிரியர்கள் 10,15 ஆண்டுகளாக பணியாற்றி வந்தோம். பணிநீட்டிப்பு கடந்த டிச.31ல் முடிவடைந்த நிலையில் அதன்பிறகு பணி நீட்டிப்பு வழங்கப்படவில்லை.




இதனால், நாங்களும் எங்கள் குடும்பத்தினரும் நிராதரவாக நிற்கிறோம். எங்களில் பெரும்பாலானோர் பிஎச்டி பட்டம் பெற்றவர்கள். மாணவர்களின் கல்வி பாதிப்பு பணிவாய்ப்பு இல்லை என்று பல்கலைக் கழக நிர்வாகம் காரணம் சொல்கிறது. ஆனால், ஏஐசிடிஇ விதிமுறைப்படி, தற்போது படித்து வரும் 22,230 மாணவர்களுக்கு 1,112 உதவி பேராசிரியர்கள் தேவை. ஆனால், வெறும் 667 நிரந்தர ஆசிரியர்களே தற்போது உள்ளனர்.


எங்களை நீக்கிவிட்டதால் மாணவர்கள் குறிப்பாக கிராமப்புற மாணவர்களின் கல்வி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு தொடர்ந்து பணிநீட்டிப்பு வழங்க வேண்டும் என்று கோரி பிப்ரவரியில் 2 கட்டங்களாக தொடர் போராட்டங்கள் நடத்தினோம்.

ஆனால், எங்களின் கோரிக்கையை தமிழக முதல்வரின் கவனத்துக்கு உயர்கல்வித் துறை அதிகாரிகள் கொண்டு போகவில்லை. எனவே எங்களது கோரிக்கையை உடனடியாக முதல்வர் நிறைவேற்ற வேண்டும் என்றனர்.

## குக்கர் தலைவர் ‘அணுகுமுறை’யில் மாற்றம் - உள்குத்து உளவாளி

சென்னை, மார்ச்.7-

இலைக் கட்சி கூட்டணியில் ‘இஷ்டப்பட்டு’ சேர்ந்திருக்கும் குக்கர் தலைவர், அண்மைக் காலமாக ‘இலைக் கட்சி கூட்டணி’ என்று சொல்வதை தவிர்த்து, “நாங்கள் நேஷனல் கூட்டணியில் இருக்கிறோம்” என்று தடம்மாறி பேசி வருகிறாராம். இது குறித்து இலைக் கட்சியின் முக்கிய தலைவர்கள், எடக்கானவரிடம் சந்தேகம் எழுப்பினார்களாம்.




ஆனால், அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளாத அவர், “குக்கர் பார்ட்டி உங்கள் ஊர் பக்கம் வந்தால் பெருசா ஒண்ணும் கண்டுக்க வேண்டாம்” என்று அலெர்ட் செய்து வைத்திருக்கிறாராம்.

இதனிடையே, செய்தியாளர்கள் சந்திப்புகளில், “நீங்கள் எடக்கானவரை ஏத்துக்கலையா... அல்லது அவரது தலைமையை ஏத்துக்கலையா?” என குக்கர் தலைவரிடம் குண்டக்க மண்டக்க கேள்விகளை எழுப்பி, அவர் வாயாலேயே எதையாவது சொல்ல வைக்க ‘வாடகைச் செய்தியாளர்கள்’ சிலரை களத்தில் இறக்கிவிட்டிருக்கிறதாம் இலைக் கட்சி.

## சின்னாளபட்டி ஸ்ரீதேவி கருமாரியம்மன் மாசிப் பெருந்திருவிழா பெண்கள் தீர்த்தக் கலசம் ஏந்தி பக்திப் பேரணி

சின்னாளபட்டி மார்ச். 07-

சின்னாளபட்டி ஸ்ரீதேவி கருமாரியம்மன் கோவில் மாசிப் பெருந்திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு அபிசேகம் செய்ய பிருந்தாவனம் தோப்பிலிருந்து 200க்கும் மேற்பட்ட பெண்கள் தீர்த்தம் கொண்டுவந்து அம்மனுக்கு அபிஷேகம் செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டியில் இருந்து அம்பாத்துரை செல்லும் சாலையில் அமைந்துள்ளது கோவில். ஒவ்வொரு வருடமும் கோவில் மாசி பெருந்திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம் இவ்வருட மாசிபெருந்திருவிழாவை முன்னிட்டு 03.03.2026 செவ்வாய் கிழமை அசலையிலிருந்து தீர்த்தம் கொண்வரப்பட்டது. அதன் பின்னர் அம்மன் நகர்வலம் நடைபெற்றது. 05.03.2026 அன்று பூச்சொரிதல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 06.03.2026 வெள்ளிக்கிழமை அம்மனுக்கு சிறப்பு அபிசேகம் செய்ய ஸ்ரீதேவி கருமாரியம்மன் கோவில் பக்தர்கள் புனித நீர் எடுத்துவர பிருந்தாவனத் தோப்பிற்கு சென்றனர். அங்கிருந்து காலை 07.00 மணியளவில் ஊர்வலமாக புறப்பட்டு கஸ்தூரிபா மருத்துவமனை சாலை, பூஞ்சோலை, தேவாங்கர் பள்ளி சாலை வழியாக வந்து கோவிலை வந்தடைந்தனர்.



அதன் பின்னர் பக்தர்கள் கொண்டுவந்த கலசத்திலிருந்து புனித நீர் எடுக்கப்பட்டு அம்மனுக்கு அபிசேகம் செய்யப்பட்டது. அதன்பின்னர் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீதேவி கருமாரியம்மன் கோவில் தர்மசாஸ்தா அறக்கட்டளையைச் சேர்ந்த நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். திருவிழாவை முன்னிட்டு கோவில் வளாகம் முழுவதும் மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.



■ நெல்லை மாவட்டம், நாங்குநேரி அருகே உள்ள பெரும்பத்து கிராமத்தில் சமீபத்தில் நடந்த துரதிர்ஷ்டவசமான வன்முறைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும் நாங்குநேரி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஆரோக்கிய எட்வின் அவர்கள் நேரில் சென்று ஆறுதல் கூறினார். நாங்குநேரி யூனியன் சேர்மன் சௌம்யா ஆரோக்கிய எட்வின் சார்பில் நிவாரண நிதி வழங்கினார். மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து செய்வோம் என்று உறுதி அளித்தார். நிகழ்வின் போது மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணவேணி சின்னத்துரை, தெற்கு நாங்குநேரி ஊராட்சி மன்ற தலைவர் சகுந்தலா, பெரும்பத்து காமராஜ், சொர்ண ராஜ் மற்றும் பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.



## மீன ராசிக்கு மாறிய சனிபகவான் அலங்காநல்லூர் ஸ்ரீ தர்ம சாஸ்தா ஆலயத்தில் யாக வேள்வி

அலங்காநல்லூர். மார்ச்.07-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலயத்தில் சனிப்பெயர்ச்சி யாக விழா நடைபெற்றது. கும்ப ராசியிலிருந்து மீன ராசிக்கு பெயர்ச்சியானதையொட்டி கோவில் நிர்வாகி ஏ.எல். சீனிவாசன், தலைமையில் உலக நன்மை வேண்டியும் பள்ளியில் தேர்வு எழுதும் மாணவ மாணவிகள் அதிக மதிப்பெண் பெற வேண்டிய சிவாச்சாரியார்கள் கோவில் வளாகப் பகுதியில், வேள்வி யாகம் வளர்த்து சிறப்பு பூஜைகள் செய்தனர். பின்னர் சனிபகவானுக்கு பால், பன்னீர், தேன், விபூதி, குங்குமம், சந்தானம், உள்ளிட்ட பத்துக்கு மேற்பட்ட அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் பல்வேறு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாதாரணை காண்பிக்கப்பட்டது.

இவ்விழாவில் உள்ளூர் மற்றும் சுற்றுவட்டார கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பூஜையில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பூஜை பொருட்களும் அன்னதானமும் வழங்கப்பட்டது .இதில் ஐயப்ப முருக பக்தர்களும் கலந்து கொண்டனர்.

## மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 1,097 புள்ளிகள் சரிந்து 78,919 புள்ளிகளில் வர்த்தகம்!!

மும்பை, மார்ச்.7-

மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 1,097 புள்ளிகள் சரிந்து 78,919 புள்ளிகளானது. சென்செக்ஸ் பட்டியலில் உள்ள 30 நிறுவனங்களில் 24 நிறுவன பங்குகள் விலை குறைந்து வர்த்தகமாயின. இறுதி நேரத்தின்போது 1,204 புள்ளிகள் சரிந்த சென்செக்ஸ், முடிவில் 1,097 புள்ளிகள் குறைந்து நிறைவடைந்தது. எட்டர்னல், ஐசிஐசிஐ வங்கிப் பங்குகள் தலா




3%, ஆக்சிஸ் வங்கிப் பங்கு 2.5%, விலை குறைந்து வர்த்தகமானது. அல்ட்ராடெக் சிமென்ட், ஹெச்.டி.எஃப்.சி., எஸ்பிஐ, பஜாஜ் ஃபின்செர்வ், எல்-டி பங்குகளும் விலை குறைந்து முடிந்தன.



■ மதுரை மாநாட்டு மையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நலன் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் பணியாற்றிய, மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு அமைச்சர் பி.மூர்த்தி கேடயம் வழங்கி பாராட்டினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் உள்ளார்.

### காணவில்லை

க.சதீஷ்குமார் ,
த.பெ.கனகராஜ்,
2/255.நடுத்தெரு,
பெரிய கோயிலங்குளம்,
சங்கரன்கோவில் தாலுகா,
தென்காசி மாவட்டம்.
நாள்.11.02.26. அன்று சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் பெரிய கோயிலங்குளம் செல்வதற்கு நின்று கொண்டிருந்த போது எனது ஒரிஜினல் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் தொலைந்து விட்டது.
மதிப்பெண் சான்றிதழ் வரிசை எண் : 23157672
பதிவு எண் : x M 24. R 2043061009. TMR Code No : S 10520 45 Date : 10.05.2024










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000